# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்
# ஆத்தூர்

------

## அசல் வழக்கு எண்.77/2022

**2026 ஆம்** வருடம் ஏப்ரல் மாதம் 21 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.2-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சீரீன் பர்ஹானா | ஜாதி | : | |
| க.பெ | : | காதர் மீரான் | தொழில் | : | வீட்டுக்குடித்தனம் |
| கிராமம் | : | சித்தையன்கோட்டை | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 38/2026 |
| தேதி | : | 21.04.2026 | | | |

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

தாவா சொத்து ஆதியில் முகமது உசேன் ராவுத்தர் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்று நீங்கள் கூறியுள்ளீர்கள். முகமது உசேன் ராவுத்தர் மற்றும் அவரது குடும்பத்தாரை பற்றி உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. 20.03.1994 ல் ஹஜ்ரம்மாள் என்பவர் மயமதம்மாள் என்பவருக்கும், பீர் முகமது என்பவருக்கும் பகுதி பகுதியாக பிரித்து சொத்தை விற்பனை செய்துள்ளது உங்களுக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. மயமதம்மாளை அவர்களையோ அல்லது அவரது வாரிசுகளையோ உங்களுக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது, பத்திரத்தில் உள்ளதை வைத்து தான் தெரியும். தாவா சொத்தை நீங்கள் யாரிடமிருந்து கிரையம் பெற்றீர்கள் என்றால் என்னுடைய பெரியம்மா ஜெரினா பேகம் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றேன்.

தாவா சொத்தை நீங்கள் வாங்கும் போது அளந்து வாங்கவில்லை என்றால் சரிதான். முன் கிரைய பத்திரத்தில் என்ன சொத்து விபரம் உள்ளதோ அதே சொத்து விபரத்தை உங்களுடைய கிரைய பத்திரத்தில் நீங்கள் எழுதிக்கொண்டீர்கள் என்றால் சரிதான். மயமத்தம்மாள் வாரிசுகளுக்கும், பீர்முகம்மது வாரிசுகளுக்கும் இடையே

பிரச்சனை நடந்தது மற்றும் காவல்நிலயத்தில் பிரச்சனை நடந்தது போன்ற விபரங்கள் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. எப்போதில் இருந்து பிரதிவாதிகள் சந்து தொடர்பாக உங்களிடம் பிரச்சனை செய்ததாக கூறுகிறீர்கள் என்றால் நான் கட்டிடம் கட்டும்போதே தாவா சந்து பிரதிவாதிகளுடையது என்று பிரதிவாதிகள் என்னுடன் பிரச்சனை செய்தார்கள். கட்டிட வேலை ஆரம்பிக்கும் போதிலிருந்தே பிரதிவாதிகள் பிரச்சனை செய்தார்கள். பிரதிவாதிகள் அந்த சந்தை தங்களுக்கு தான் பாத்தியம் என்றும், வேலைக்கு வந்த நபர்களை அந்த சந்து பக்கம் வரவிடாமல் பார்த்துக்கொண்டார்கள் என்றால் சரிதான்.

அரசு அலுவலர் துணையுடன் தாவா இடத்தில் கல் ஊன்றியதாக நீங்கள் கூறியுள்ளீர்கள் என்றால் சரிதான். அந்த அரசு அலுவலர் சர்வேயர் என்றால் சரிதான். சர்வேயர் அளந்து பார்த்து கல் ஊன்ற சொல்லிய இடத்தில் பிரதிவாதி கல்லை ஊன்றிவிட்டார் என்றால் சரிதான். சர்வேயர் கூறியதன் பேரில் பிரதிவாதிகள் தாவா இடத்தில் கல் ஊன்றியது குறித்து எழுத்து மூலமாக எந்த ஆட்சேபணையும் அரசு அதிகாரிகளுக்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். சர்வேயர் வந்தபோது கிராம நிர்வாக அலுவலர் மற்றும் இடத்தை சங்கிலி பிடித்து அளப்பதற்கு அவர்களுடைய உதவியாளர்கள் ஆகியோர் அன்றையதினம் வந்தார்கள் என்றால் சரிதான். எந்த தேதியில் தாவா இடத்தை சர்வேயர் மூலம் அளக்க வந்தார்கள் என்றால் தேதி நியாபகமில்லை.

சர்வேயர் அளந்தபிறகு தான் நீங்கள் கட்டிடம் கட்ட ஆரம்பித்தீர்கள் என்றால் சரியல்ல, நான் கட்டிடம் கட்ட ஆரம்பித்த சமயத்தில் தான் சர்வேயர் அளக்க வந்தார். தாவா சொத்திற்கு தெற்கு பகுதியில் பிரதிவாதிகள் இடம் உள்ளது என்றால் சரிதான். உங்களின் தெற்கு புற சுவற்றில் இருந்து தெற்கே 1 1/2 அடியில் இருந்து 2 அடி வரை சந்து உள்ளது என்றால் சரிதான். அதற்கும் தெற்கே பிரதிவாதிகள் வீடு உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகளின் வீட்டுச் சுவர் தான் நீங்கள் சொல்லும் சந்திற்கு தெற்கே உள்ள சுவர் என்றால் சரிதான்.

உங்கள் பெரியம்மா ஜெரினாபேகத்திற்கு முன்பு உள்ள தாவா சொத்திற்கான ஆவணங்களை நீங்கள் பார்த்துள்ளீர்களா, படித்துள்ளீர்களா என்றால் என் கணவருக்கு தான் அந்த ஆவணங்களை பற்றி தெரியும். தாவா சொத்தின் முந்தைய ஆவணமான மயமத்தம்மாளின் ஆவணத்தின் தாவா சொத்திற்கு தெற்கே சந்தோ, பொது சுவரோ இருப்பதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. உங்களுக்கு தெற்கே உள்ள சந்து உங்களுடையது கிடையாது என்றும், சந்திற்கு தெற்கே உள்ள சுவர் பொதுச்சுவர் கிடையாது என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் எந்த காலத்திலும் சட்டத்திற்கும், நியாயத்திற்கும் விரோதமாக உங்களுக்கு எதிராக நடந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். வீடு கட்ட ஆரம்பித்த பிறகு நடந்துகொண்டார்கள். நீங்கள் வீடு கட்டியுள்ளது தெற்கு பகுதியில் உங்களுடைய அத்திலிருந்து 3/4 அடி பிரதிவாதிகளுடைய இடத்தில் ஆக்கிரமித்து கட்டியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. சர்வேயர் தாவா இடத்தை அளந்து சரியான முறையில் தான் கல்லை ஊன்ற சொல்லியுள்ளார் என்றும், நீங்கள் பரிகாரத்தில் கூறியுள்ள படி அந்த கல்லை அகற்ற வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

ஏற்கனவே மயம்மத்தம்மாள் குடும்பத்திற்கும், பீர்முகம்மது குடும்பத்திற்கும் உள்ள பிரச்சனை காரணமாக உங்கள் பெரியம்மா ஜெரினாபேகத்திற்கு பொது சுவர் மற்றும் பொது சந்து என்று குழப்பத்தை ஏற்படுத்துவதற்காக எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றும், அந்த சொத்து விபரத்தை தான் ஜெரினாபேகத்திடம் இருந்து நீங்கள் வாங்கிய கிரைய பத்திரத்திலும் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனவே தாவா சந்து மற்றும் பொதுச்சுவர் என்று கூறப்படுவது பிரதிவாதிகளுக்கு மட்டுமே பாத்தியம் என்றும், நீங்கள் கூறுவது போல் பொது சுவரோ, பொது சந்தோ கிடையாது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு உங்களது தரப்பில் ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நீங்கள் இவ்வழக்கில் கோரிய செயலுறுத்துக் கட்டளை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம்

உங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

நீங்கள் வீடு கட்டுவதற்கு முன்பாக சித்தையன்கோட்டை பேரூராட்சியில் முன் அனுமதி பெறவில்லை என்றால் சரிதான். நீங்கள் கட்டியுள்ள வீடு சட்டவிரோதமாக கட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor